நம்பிக்கைகள் அனைத்தும் நாசமாகின்றன!

Phone No 4502 Regd. No. M. 5458
விலை அரை அணு இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (17—3—50) வெளியீடு (18—3—50) [இதழ் 196

ஏதும் செய்ய வழியின்றி இடர்ப்படுகின்றேன்

கல்வித் திட்டங்கள் பல கைவிடப்பட்டன

அறிவுப்பணிக்கு ஆதரவு போதவில்லை

இந்திய கல்வி அமைச்சர் சிந்தும் கண்ணீர்

"இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தொகையைக்கண்டு நான் மிகவும் வருந்துகிறேன். போதிய நிதியில்லாமல் நாம் எதையும் செய்ய முடியாது. இந்த வரவு—செலவுத் திட்டப்படி கல்விக்கு அளிக்கப்பட்டிருக்கும் தொகையை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. நான் உதவி அற்றவனாக இருக்கிறேன். இந்த நிலையில் ஆதாரக் கல்வி, சமுதாயக் கல்வி, முதியோர் கல்வி ஆகிய திட்டங்கள் வளர முடியாமல், அப்படியே ஒதுக்கிவைக்கப் பட வேண்டிய நிலையில் உள்ளன."

"இப்படிப்பட்ட நிலைமை மாறுமென நான் நினைக்கவில்லை. எனது நம்பிக்கைகள் அனைத்து நாசமாகிக்கொண்டே இருக்கின்றன."

இந்தியப் பாராளும் மன்றத்தில் கல்விக்கு நிதி ஒதுக்கப்பட்டபோது, கல்வி மந்திரி தோழர் அபுல்கலாம் அசாத் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் பேசுகையில்,—

இப்படிப்பட்ட நிலைமை மாறும் என சென்ற ஆண்டு எதிர்பார்த்தேன். ஆனால் நிலைமை வரவர மோசமாகிக் கொண்டேபோகிறது. மேலும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகட்கு இந்தநிலைமாறும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

மூன்று ஆண்டுகட்கு முன்னர், நான் பதவியேற்றபோது கல்விக்கென ஒதுக்கப்பட்டிருந்த தொகை 2½ கோடியாக இருந்தது பின்னர் அதனை 6 கோடியாக உயர்த்தினேன், ஆனால் பற்றாக்குறை காரணமாக 10 சதவிகிதம் குறைக்க ஒப்புக்கொள்ள வேண்டியவனானேன். செலவு குறைக்கப்படுவதை எவ்வளவோ கண்டித்தும் பயனில்லாமற் போயிற்று. இதனால் சமுதாயக்கல்வித்திட்டம் கைவிடப்பட்டது. மேலும் பல திட்டங்களைக் கைவிட நேரிட்டது.

கல்வித்திட்டங்களை நிறைவேற்றக் குறைந்த அளவு 15 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆனால் அடுத்த ஆண்டு கல்விக்கென செலவிடப்பட அரசியலார் ஒதுக்கியிருக்கும் தொகை சரியாக 3 கோடிகூட இல்லை. இதில் ஆதாரக்கல்வி, முதியோர்கல்வி, ஆசிரியர்களுக்குச்குப் பயிற்சி அளிக்கும் செலவு, ஆகியவற்றிற்கு 15 லட்சம் ரூபாய் தான் செலவிட முடியும். இது எனக்கு மிகமிக வருத்தத்தை அளிக்

(தொடர்ச்சி 2ம் பக்கம் பார்க்க)

மதத் தலைவர்களைக் கண்டிப்பது மதத்துவேஷமாகாது

—————(0)—————

ஒழுங்கீனத்தைக் கண்டிப்பது ஊறுசெய்வதாகுமா?

—————(0)—————

"உடுமலைபீரங்கி" வழக்கில் நீதிபதியின் 'நல்ல தீர்ப்பு'!

சென்னை, மார்ச் 15—

"கிருஸ்தவ மதத்தின் ஊழல்கள்" என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டதற்காக "உடுமலை பீரங்கி" பத்திரிகையின் ஆசிரியரும் பிரசுரகர்த்தருமான தோழர் ரங்கநாதம் என்பவர் மீதும், அக்கட்டுரையை அச்சிட்டுத்தந்தகாரணத்தால் ஆந்திரா பிரஸ் சொந்தக்காரரான ஆதிநாராயண என்பவர்மீதும் 295(A) ஐ பி. ஸி. சட்டப்படி தொடரப்பட்டிருந்த வழக்கை சென்னை எழும்பூர் நீதிமன்ற முதல் மாகாண மாஜிஸ்ட்ரேட் தோழர் கே ராமசாமி கவுண்டர் தள்ளுபடி செய்தார். வழக்கைத் தள்ளுபடி செய்து அவர் அளித்த தீர்ப்பாவது:—

இக்கட்டுரையில் கிருஸ்தவ மதத்துக்கோ, மத உணர்ச்சிக்கோ ஊறுசெய்யும் விஷயம் ஏதும் இல்லை. கிருஸ்தவ மத பாதிரியார்களை—அல்லது 'சுவாமி' எனப்படுவோரைத் தாக்கி எழுதப்பட்டிருக்கிறது. இங்ஙனம் மதக் குருக்களைக் கண்டிப்பதுஎப்படிக்கிருஸ்தவ மதத்தைத் தாக்குவதாகும்? அல்லது மதவுணர்ச்சிக்கு ஊறு செய்வதாகும்?

மதச்குருக்கள் மதத்தைப் பற்றிப் பிரசாரம் செய்வோராவர். அப்படிப்பட்டோர் செய்யும் குற்றங்குறைகளை எடுத்துக்காட்டுவது மதத்துவேஷமாகாது. உதாரணமாக, இந்து மடாதிபதிகள் அல்லது கோவில் அர்ச்சகர்கள் ஒழுக்கங்கெட்டவர்களாக இருந்தால் அவர்களைக் கண்டிப்பது இந்து மதத்தைக் தாக்குவதாகவோ, அம்மத உணர்ச்சிக்கு ஊறு தேடுவதாகவோ ஆகாது.

இக்கட்டுரையை ஆராய்ந்து பார்க்கையில், கிருஸ்தவ மத ஆலயங்களுக்குச் செல்வோர், பாதிரிகள், ஆகியோருடைய தன்மைகளைக் கண்டிப்பது அல்லது குறை கூறுவதாகவேயிருக்கிறது. கட்டுரையின் போக்குச் சற்று வேகமாகக் காணப்படினும், கிருஸ்தவ மதம் இதனால் தாக்கப்படுவதாக எனக்குப்புலப்படவில்லை கிருஸ்தவ மதத்தையோ, மத உணர்ச்சியையோ அவமதிக்கும்படியான வார்த்தை ஒன்று கூட இதில் காணப்படவில்லை. எனவே, இக்கட்டுரை ஐ. பி. ஸி. சட்டம் 295-வது பிரிவுப்படி குற்றமாகாது.

டிரினிடாட் பொதுத் தேர்தல்

(டிரினிடாட்), மார்ச். 16—

மேற்கு இந்தியத் தீவுகளிலுள்ள டிரினிடாடில் பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. புது அரசியல் அங்கீகரிக்கப்பட்ட பின்பு தேர்தல் தேதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இத்தேர்தலில் பல இந்தியர்கள் போட்டியிடவிருக்கின்றனர்.

டிரினிடாடில் 10,000 இந்தியர்கள் இருந்து வருகின்றனர்.

போட்டியிடவிருக்கும் இந்தியர்கள் விவரமாவது: சட்ட நிபுணர் அடோஜாசிங், ராம் என்ற வைத்திய டாக்டர் ரமேஷ், செல்வந்தர் ராகன் மகாராஜ், மற்றொரு வைத்திய பீர்தம்சிங்.

அங்கத்தினர் இல்லாத சென்னை சட்டசபை!

சபாநாயகரின் திண்டாட்டம்

சென்னை, மார்ச். 16—

நேற்று பிற்பகலில் சபாநாயகர் சென்னை சட்டசபைக்குள் நுழைந்தபோது ஒரு சில சட்டசபை அங்கத்தினர்களே இருந்தார்கள். ஒரு மந்திரிகூட சபையில் இல்லை!

திகைப்படைந்த சபாநாயகர் சட்டசபைக் காரியதரிசியுடன் ரகசியமாக ஏதோ பேசினர். இதற்குள், இருந்த அங்கத்தினர்கள், அங்கத்தினர்களும், மந்திரிகளும் இல்லாவிட்டால் பரவாயில்லை, சபை நடத்தப்படலாமென்று ஆலோசனை கூறினர்கள்.

அதன்பேரில் சபை நடக்க ஆரம்பித்தது. சிறிது நேரம் கழித்து உள்ளே நுழைந்த தோழர் கெ. ஜயராம் நாயுடு திகைப்படைந்து உடனே சென்று, சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் மந்திரி கோபால் ரெட்டியை அழைத்துவந்தார். அவரைத் தொடர்ந்துவந்த சுகாதார மந்திரி டாக்டர் ராஜன் காலங்கழித்து வந்ததற்காக மன்னிப்புக் கோரினர். போனவுடனே வீட்டில் சாப்பாடு போடவில்லையென்று அவர் சாக்கு கூறினர்!

கசையடி தண்டனை

லண்டன, மார்ச். 16—

பலாத்கார முறையில் செய்யப்படும் குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதென்றும், அவைகளை ஒழிக்க, கசையடி தண்டனையை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று பிரிட்டிஷ் நீதிபதிகள் வற்புறுத்துகின்றனர்.

பிரிட்டிஷ் பிரதம நீதிபதியும், நீதிபதி ஸ்டிரெட் பீல்டும் வெவ்வேறு வழக்குகளின் தீர்ப்பில் இக்கருத்தை வற்புறுத்திருக்கின்றனர்.

இருவர்மீது பலாத்கார முறையைப் பிரயோகித்துக் கொள்ளையிட்டதாகக் கொண்டு வரப்பட்ட வழக்கில் நீதிபதி ஸ்டிரெட் பீல்ட், 'கசையடி தண்டனையைக் கொடுக்கும் அதிகாரம் கோர்ட்டுகளுக்குக் கொடுக்கப்படாவிட்டால், இம்மாதிரி குற்றங்கள் அதிகரித்துக் கொண்டேதான் போகும்' என்று குறிப்பிட்டு எதிரிகளுக்குத் தலா 5-ஆண்டு சிறைக்காவல் தண்டனை விதித்தார். —ராய்ட்டர்.

ஆஸ்திரேலிய கப்பல் போக்குவரத்து

ஸிட்னி, மார்ச். 16—

ஆஸ்திரேலிய சர்க்கார் இப்பொழுது நடத்திவரும் கப்பல் போக்குவரத்தை தனிப்பட்டவர்கள் நடத்தும்படி விட்டுவிடுவதென முடிவு செய்திருக்கிறது. இதை சர்க்கார் நடத்துவதால் பெரும் செலவு ஏற்படுகிறதாம்.

———

டெஹ்ரான், மார்ச். 16—

இந்தியாவுக்கும் இரானுக்கு மிடையே நட்பு ஒப்பந்தம் இன்று கையெழுத்தாகியிருக்கிறது.

ரஷ்யா, செஞ்சீனவுடன் ஹோசிமின் உடன்படிக்கை

—————(0)—————

பிரெஞ்சு வட்டாரங்களில் கவலை

லண்டன், மார்ச். 16—

வியட்னும் படைத் தலைவர் ஹோசிமின் ரஷ்யாவுடனும், செஞ்சீனவுடனும் சீக்கிரமே உடன்படிக்கை செய்துகொள்ளலாம் என்று பிரெஞ்சு வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஹோசிமின் கம்யூனிஸ்ட் சீனத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி முடித்துவிட்டார் என்றும், ரஷ்யத் தலைவர்களைச் சந்தித்துப் பேச அவர் மாஸ்கோ செல்லலாம் என்றும் கூறப்படுகிறது.

இதனால் தென் கிழக்கு ஆசியாவில் ஆபத்து அதிகரிக்கலாம் என்றும் இந்தோசீனவிலுள்ள பிரெஞ்சுப் படைக்கு வெளி உதவி கிடைக்காவிட்டால், சில இடங்களைக் கைவிடும்படி நேரும் என்றும் பிரெஞ்சு வட்டாரங்களில் கவலை தெரிவிக்கப்படுகிறது. இந்தோசீன விஷயத்தில் உதவி செய்வதாக அமெரிக்கா, வாக்குறுதியைச் சீக்கிரம் அளிப்பது தைரியமளிக்கும் என்று இவ்வட்டாரங்களில் கூறப்படுகிறது.

வெள்ளை மாதை :: மணந்த காமா

லண்டன், மார்ச். 16—

வெள்ளை மாதை மணந்த ஆப்பிரிக்க பாமங்டோ ஜாதியினரின் தலைவர் காமா சில நிபந்தனைகள் பேரில் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆப்பிரிக்கா செல்ல அனுமதிக்கப்படுவார் என்றும், இவ்விவரத்தை காமன்வெல்த் உறவு மந்திரி காமன்ஸில் இன்று அறிவிப்பார் என்றும் டெய்லி ஹெரால்டின் அரசியல் நிருபர் அறிவிக்கிறார்.

அந்த நிபந்தனைகளாவன: தன் அந்தஸ்தைக் கொண்டு அவர் அந்த வகுப்பினரிடையே தகராறு ஏற்படாமல் இருக்கவேண்டும். அப்படிக் கலகம் ஏதாவது ஏற்பட்டால் அவர் உடனே அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டு வந்துவிடவேண்டும்.

———

அம்மான், மார்ச். 16—

அரபு ஒலிம்பிக் விளையாட்டுகள் இவ்வருஷம் கெய்ரோவில் நடைபெறவிருக்கிறது.

மாலை மணி

சென்னை 17—3—50 வெள்ளிக்கிழமை

சொல்லும் செயலும்!

வேறு எதற்கு நாட்டில் பஞ்சம் ஏற்பட்டாலும், காங்கிரஸ்காரர்களின் வாக்குறுதிகளுக்குமட்டும் பஞ்சம் ஏற்படுவதில்லை!

காங்கிரஸ்காரர்கள் தாங்கள் சாதிக்கப்போகும் சாதனைகள் பற்றிப் பொது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் ஏராளம்; என்றாலும் ஒன்றேனும் உருப்படியாக நிறைவேறிய பாடில்லை! வாக்குறுதிகளைக் கண்டு பொதுமக்கள், அவைகள் தங்கள் வறட்சி நீக்கும் நீரோடைகள் என நினைத்தனர்; ஆனால், அவைகள் ஒவ்வொன்றும் கானல் நீரேயாகும் என்பது, இப்பொழுது புலப்படுத்தப்பட்டு வருகின்றது.

நாட்டைப் போராட்டத்தின் மூலமே பெற்று, வெள்ளையனை விரட்டியடிப்போம் என்றனர்; ஆனால் வெள்ளைக்காரன் உலகியல் நெருக்கடி காரணமாகத் தானாக தன் ஆதிக்கப்பிடியைக் கைநழுவவிட்டான்; காங்கிரஸ்காரர்கள் அதனைக் கைப்பற்றிக் கொண்டு, வெள்ளைக்காரனுக்கு வழியனுப்பிக் கொடுத்தனர்!

அகிம்சையை அடிப்படையாகக் கொண்டே ஆளுவோம் என்றனர்; இன்று ஹிம்சையின் எல்லையை எட்டிப் பிடித்துள்ளனர்!

அடக்குமுறைச் சட்டங்கள் அனைத்தையும் உடைப்போம் என்று வீரம் பேசினர்; அந்தச் சட்டங்களை அமுத்தமானதாகவும், அதிகமான அளவினதாகவும் இன்று ஆக்கி வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

போலீஸ் கொடுமையாட்சியை ஒழிப்போம் என்று கர்ஜித்தனர்; போலீசை இரண்டு பங்காகப் பெருக்கி இருப்பதோடு, கொடுமையின் அளவு வளர, அவர்களது அதிகாரத்தையும் பெருக்கியுள்ளனர்.

தங்கள் ஆட்சியில் அதிகப்படி சம்பளம் ரூ. 500 ஆகவும், குறைந்த அளவு சம்பளம் ரூ. 50 ஆகவுந்தான் இருக்கும் என்று கூறினர்; இப்பொழுது எப்பொழுதும் உள்ளது போலதான் சம்பளவிகிதம் இருக்கிறது; மந்திரிமார்களும், எம். எல். ஏ. களும் அவ்வப்போது தங்களுக்குக் கிடைக்கும் ஊதியம், படி முதலியன போதாதென்று பெருக்கிக்கொண்டேயிருக்கின்றனர்.

எண்ண உரிமை— எழுத உரிமை— எடுத்துக்கூற உரிமை ஆகிய பல அடிப்படை உரிமைகள் தங்கள் ஆட்சியிலே வழங்கப்படும் என்று வாக்குறுதி செய்தனர்; எதிர்க்கட்சிக்காரர்கள் என்ற ஒரே காரணத்துக்காக எதிர்க்கட்சியினரின் அவ்வுரிமைகளெல்லாம் இப்பொழுது பறிக்கப்படுகின்றன.

ஏழைகள் தொல்லைகள் நீங்கும், பணக்காரர்களின் கொட்டமும் அடங்கும் என்றனர்; ஏழைகள் எல்லையில்லாத் துன்பங்களை அனுபவிக்கவும், பணக்காரர்கள்--முதலாளிகள் ஆகியவர்களுக்கு வரிச்சலுகைகள் காட்டப்பட்டு, அவர் சுகமாக வாழவும் ஆன முறையில் சட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன.

இப்படியாகக் காங்கிரஸ்காரர்கள் அளித்து நிறைவேறாமல் போன வாக்குறுதிகள் பலப்பல!

இவர்கள் ஆட்சிப்பீடம் ஏறிய சென்ற நான்கு ஆண்டு காலத்தில் மசோதாக்கள் கணக்கில்லாமல், எதிர்ப்பு எதனையும் கவனிக்காமல் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனால் ஒன்றாவது உருவான பலனைக் கொடுக்கக்கூடிய வகையில், நடைமுறையில் கொண்டுவரப்பட்டதாகத் தெரியவில்லை — கொண்டுவரப்பட்டுள்ள சிலவும் அலங்கோலமான முறையிலேயே இருந்து வருகின்றன.

வழக்கமாகப் பொது மக்களிடம் வைக்கும் வாக்குறுதி ஒன்றை இந்தியாவின் தொழில் மந்திரி தோழர் ஜகஜீவன்ராம் அவர்கள், இப்பொழுது இந்தியப் பாராளுமன்றத்தில் நினைவுபடுத்துகிறார். அதுதான், **தொழிலாளர்க்கு லாபத்தில் பங்கு கொடுக்கும் திட்டமாகும்.**

தொழிலாளர்க்கு லாபத்தில் பங்கு கிடைக்கும்படியான திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரப்போவதாக ஆட்சிப்பீடம் ஏறிய நாள் தொட்டு, தொழில் மந்திரி கூறுகிறார். தொழிலாளர்க்கு நன்மை புரிய வேண்டும் என்ற ஆசை தொழில் மந்திரிக்கு இருப்பதை, அது காட்டுகிறது; அதுவரையில் யாவர்க்கும் மகிழ்ச்சி ஏற்படும் என்பதில் ஐயமில்லை! அந்த ஆசையை, அதிகாரம் கையிலிருந்தும் நிறைவேற்ற முடியாமல் போவானேன்? எது அல்லது யார் இடையில் நின்று தடுக்கிறார்கள்? ஏன் தடுக்கிறார்கள்? இங்கேதான் சூட்சமம் இருக்கிறது!

அந்தச் சூட்சமத்தைத் தோழர் ஜகஜீவன்ராம் அவர்களே விளக்குகிறார்.

'**தாங்கள் ஒப்புக்கொண்ட லாபப் பங்கீடு திட்டத்தைத் தொழில் முதலாளிகள் நிராகரித்துவிட்டனர் இத்திட்டத்தைச் சர்க்கார் மீண்டும் பரிசீலித்து வருகிறது**'' என்பதே அவர் தரும் விளக்கம். முதலாளிகளின் சுட்டு விரல் ஆட்டியபடி ஆடும் வகையில் அரசாங்கம் அமைந்திருக்கிறது; அவர்கள் முகங்கோணாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும்; அவர்களைப் பாதிக்கக்கூடிய எந்தச் செயல் நடந்தாலும், எந்தத் திட்டம் தீட்டப்பட்டாலும், எந்த வரி விதிக்கப்பட்டாலும் அவற்றையெல்லாம் அவர்கள் நிராகரித்தே தீருவர்; தொழிலாளர்க்கு லாபப் பங்கீடு கொடுக்கும்திட்டத்தை முதலாளிகள் நிராகரிக்கின்றனர்; எனவே, அந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியாமல் பரிசீலனை செய்வதிலேயே இருக்கிறது அரசாங்கம்—இவ்வளவு விளக்கங்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது தொழில் மந்திரியின் கூற்று.

முதலாளிகள் நிராகரிக்கின்றனர்—எனவே திட்டம் அமுலுக்குக் கொண்டுவர முடியவில்லை என்று கூறி நிற்கும் அரசாங்கத்தை, எப்படிப் பொதுமக்கள் அரசாங்கம்ஏழை மக்களின் பாதுகாப்புக்காக ஏற்பட்டது என்று கருத முடியும்? அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அடுத்தடுத்துக் கவனித்து வந்தால், பணக்காரர்களுக்கும்--முதலாளிகளுக்கும் பாதுகாப்பு அளிக்க அது எவ்வளவு தொலைவு பாடுபடுகின்றது என்பது இனிது விளங்கும்.

பொருளாதார ஜனநாயக முறையை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்கிறார். எங்கே நோக்கம் நிறைவேற வழி வகுக்கப்படுகிறது! முதலாளிகள் ஆட்டி விட்டபடி ஆடும் அரசாங்கம், பொருளாதாரத்தில் ஜனநாயக முறையை ஏற்படுத்தும் வல்லமை படைத்தது என்று எப்படிப் பொதுமக்கள் நம்ப இயலும்? வாக்குறுதி நன்றாகத்தானிருக்கிறது--அது நிறைவேற்றும் வழியைவகுக்க இன்றைய அரசாங்கத்திற்கு ஆற்றலிருக்கிறதா என்பதிலேயே ஐயப்பாடு எழும்புகிறதே!

"**தொழிற்சாலைகளை மூடிவிட தொழில் முதலாளிகள் பயமுறுத்துகின்றனர். தொழில் முதலாளிகள் மீது நடவடிக்கை எடுப்பது, தொழிலாளர் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினைக்கும் பரிகாரமாகாது. தொழிற்சாலைகளை சர்க்கார் ஏற்று நடத்துவது மற்றொரு வழியாகும்**'' என்று தொழில் மந்திரியார் கூறுகிறார், நாட்டிலே உள்ள முதலாளிகள் செய்யும் கொடுமை மந்திரியாருக்குப் புலப்படுகிறது—அந்தக் கொடுமையைத் தீர்க்கும் பரிகாரம் தொழிற்சாலைகளைச் சர்க்கார் ஏற்று நடத்துவதாகும் என்பது புரிகிறது—புரிந்தும் சர்க்கார் தொழிற்சாலைகளை ஏற்காமலிருப்பானேன்?

இன்றைய ஆளவந்தார்களால் வாக்குறுதி அளிக்கத் தெரிகிறது—ஆனால் அவற்றை நிறைவேற்றும் வகையில் திட்டம் தீட்ட முடிகிறதா எனில், இல்லை! முதலாளித்வத்திற்கு எடுபிடியாக இருக்கும் மட்டும் திட்டங்கள் தீட்ட முடியாதுதான்; தீட்டினாலும் நிறைவேற்றச்செய்ய முடியாதுதான். உண்மையாகத் திரண்டெழும் முற்போக்குச் சக்திகளின் வழியில் நின்று, திட்டம் தீட்ட முற்பட்டால் சொல்லும் செயலும் ஒன்றிப் போக வழியேற்படும். ஆணவத்தையும், அதிகார ஆசையையுமட்டுமே கொண்டிருக்கும் முதலாளிகளின் பக்கம் நின்று ஆட்சி நடைபெற்றால், சொல் சொல்லாகவேதான் நிற்கும், செயல் வேறாகத்தான் நிற்கும்!

நம்பிக்கை அனைத்தும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது,'' என்று கூறினர்

கல்வி அமைச்சரின் இந்தப் பேச்சு, இந்திய அரசியலார் நாட்டு மக்களை நல்லறிவுடையோராகச் செய்யும் பணியில் எத்துணை நாட்டம் செலுத்துகிறார்கள் என்பதை விளக்கிக் காட்டப் போதிய சான்றாகும்.

"ஒரு கலைக் கூடத்தைமூடினால் சில சிறைக் கூடத்தைத் திறக்க நேரிடும்'' என்றார் மேனாட்டறிஞர் ஒருவர்.

இந்திய அரசியலார் கல்வி திட்டத்தில் காட்டும்பொறுப்பின்மையை, இந்த அறிவுரையோடு பொறுத்திப்பார்க்கையில், சிலசிறைக்கூடங்களை அல்ல பல சிறைக்கூடங்களைத் திறக்க அரசியலார் திட்டமிடுகிறார்கள் என்றால் அதுமிகையாகாது.

கல்விக்குப் பணமில்லையென கையை விரிக்கும் இதே அரசியலார்தான், வரவு செலவு திட்டத்தில் ராணுவத்திற்கென வருவாயில் பாதிக்கு மேல் வழங்கியுள்ளனர். அது மட்டுமின்றி அந்த அளவு, குறைக்கப்பட்ட அளவு என்னும் சாமார்த்தியமாகக் கணக்குக் காட்டியுள்ளனர். என்னே விந்தை! மக்களின் அறிவு துலங்க, போதிய வழிவகை காணாதிருக்கும் தர்க்கண்ணியர்கள்- பகுத்தறிவுக்குப் பாதை வகுக்காத 'பார புத்திரர்கள்' படை பலத்தைப் பெருக்குகின்றனர்!

படிப்புப்பலத்தைவிடபடை பலத்திலே இந்திய அரசியலார்க்கு அவ்வளவு அக்கறை!

ஆம்! அவசியமான அக்கறைதானே! ஏனெனில், இன்றையத் தினம் அவர்களுடைய ஆட்சிப் படைபலத்தை நம்பித்தானே வாழுகிறது!

இது பொதுவாக மத்திய ஆட்சி முறையின் மகத்துவம். மற்றும் மாகாண ஆட்சி முறைகளைப் பற்றியோ கேட்கவே வேண்டியதில்லை. மாகாணங்களில் இன்று நடப்பது மக்களாட்சி என்று சொல்லப்படுகிறது - பெயரளவிலே! நடப்பது அதுவல்ல; போலீஸ் ஆட்சி! அதற்கோர் எடுத்துக்காட்டு வேண்டுமெனில், அண்மையில் பாராளும் மன்றத்தில் "இராஜ்யங்கள் போலீஸ் படைப் பலத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்'' என்று பட்டேல் சுட்டிக் காட்டியிருப்பதேபோதும் எனலாம்.

இங்ஙனம் படை பலம் கொண்டு பாராள நினைக்கும் பக்தர்களை அமைச்சர்களாகக் கொண்ட ஆட்சியில் படிப்புக்கு ஆதரவு கிடைக்குமென யார்தான் எதிர்பார்க்க இயலும்!

எனவேதான் "என் செய்வேன், பணமில்லையே'' என ஏங்குகிறார் — கலங்குகிறார்— கண்ணீர் விடுகிறார் கல்வி அமைச்சர் அபுல்கலாம் ஆசாத்!

வடசென்னை வாசிகளுக்கு ஒரு வாய்ப்பு

—(0)—

தியாகராயர் உயர்நிலைப் பள்ளி கல்லூரியாகும்

சென்னை, மார்ச். 16—

மிகவும் மக்கட் தொகை அதிகரித்துள்ள வடசென்னையில், ஒரு கல்லூரி இல்லாத குறை சீக்கிரமே தீர்ந்துவிடும்

50-ஆண்டுகளாக இருந்து வரும் வண்ணாரப்பேட்டை தியாகராயர் உயர்நிலைப் பள்ளியைக் கல்லூரியாக ஆக்க ஏற்பாடு செய்யப்படுவதாக அப்பள்ளியின் டிரஸ்டி தோழர் பி. ராமசாமி செட்டியார் கூறினர். இப்பள்ளி காலஞ்சென்ற சர். பி. தியாகராயச்செட்டியாரால் ஏற்படுத்தப்பட்டது.

உயர்தரப் பள்ளியைக் கல்லூரியாக ஆக்குவதற்குச் சென்னை பல்கலைக் கழகக் கமிஷன் ஒன்று சென்று பார்வையிட்டு சிபார்சு செய்யுமென்று கூறப்படுகிறது.

இப்பொழுது தகுந்த இடத்தில் கல்லூரி அமைப்பதற்கும் அதில் லேபரட்ரி வைப்பதற்கும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இது இரண்டாவது கிரேட் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டு பிறகு பி.ஏ, பி.ஏ, ஆனர்ஸ் வகுப்புகள் ஆரம்பிக்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

டெஹ்ரான், மார்ச் 16—

இஸ்ரேல் சர்க்காரைப் பாரசீக சர்க்கார் அங்கீகரித்துவிட்டதாக, ஐ. நா வின் பாரசீக பிரதிநிதியான நஸருல்லா எண்டஸீம் இஸ்ரேல் பிரதிநிதியிடம் அறிவித்திருக்கிறார்.

மந்திரிசபையில் நெருக்கடி

அம்மான், மார்ச். 15—

இஸ்ரேலில் மந்திரிசபைக்குள் தகராறு நாளுக்கு நாள் வலுத்து வருவதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

மந்திரிசபை கூட்டத்திற்குக் கட்டாயம் வரவேண்டும் என்று பிரதமர் பென்குரியன் எவ்வளவோ சொல்லியும், 4 மந்திரிகள் வராமலேயே இருந்ததால் அவர்கள் நால்வரையும் 'டிஸ்மிஸ்' செய்ய இஸ்ரேல் பிரதமர் தீர்மானித்திருக்கிறார்.

சோஷலிஸ்ட் பள்ளிக்கூடங்களின் யூத மாணவர்கள் சென்று படிக்க வேண்டும் என்று தீர்ப்பு ஏற்பட்டதை எதிர்த்தே இந்த நான்கு மந்திரிகளும் மந்திரிசபை கூட்டத்திற்கு வர மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இஸ்ரேல் பிரதமருக்கு மந்திரிகளை டிஸ்மிஸ் செய்யும் அதிகாரம் இல்லை என்று, இந்த நான்கு மந்திரிகளும் எதிர் புகார் செய்வர் என்று தெரிகிறது.

கண்ணை இழந்த மந்திரவாதிகள்

லண்டன், மார்ச். 16—

பிரிட்டிஷ் மந்திரவாதிகள் சங்கத்தில் கண்களை இழந்த 6 மந்திரவாதிகள் மெம்பராக சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்

கண் தெரியாததினால் மனோவசியம் செய்யும் சக்தி இன்னும் அதிகரிக்க வசதியிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

அஞ்சாநெஞ்சன் அழகர்சாமி நினைவு வாரம்

திராவிட முன்னேற்றக் கழகம் எந்த இலட்சியத்திற்காக நாட்டில் பாடுபட்டு வருகிறதோ, அந்த இலட்சியத்திற்காகவே பாடுபட்டு, இறுதிவரையில் கொள்கையை விட்டுக்கொடுக்காது உழைத்து, மறைந்த மாவீரன்—அஞ்சாநெஞ்சன் அழகர்சாமியின் நினைவுநாள் மார்ச் 28-ம் நாளாகிறது. அந்த நாளை முதலாகக்கொண்ட ஒரு வார காலத்தை, அதாவது 28—3—50 முதல் 3—4—50 வரை உள்ள வாரத்தை "அஞ்சா நெஞ்சன் அழகர்சாமியின் நினைவு வாரமா"கக் கொண்டாடும்படி கிளைக் கழகங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

செய்யவேண்டிய செயல்கள்:-

1. கழகக் கட்டிடத்தில் கொடி யேற்றுவித்தல்.
2. அழகர்சாமியின் உருவப் படங்களைப் பொதுஇடங்களில் கட்டுதல்—அச்சடித்துப் பலருக்கும் கொடுத்தல்.
3. அழகர்சாமியின் வாழ்க்கை வரலாற்றைத் துண்டு வெளியீடுகள் மூலம் வெளியிடுதல்.
4. பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவுகளின் மூலம் வீர வணக்கம் செலுத்துதல்.

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர்
தி. மு. கழகம்

பி. அண்டு சி. மில்லில் போனஸ் தொகை குறைக்கிறது

குறைந்த போனஸை வாங்க தொழிலாளர் மறுப்பு!

சென்னை, மார்ச் 16—

1950-ம் ஆண்டு டிசம்பர் 31-ந் தேதி முடிய அரை வருடத்துக்கு மொத்த சம்பளத்தில் 10 சதவிகிதம்தான் போனசாகக்கொடுப்பதென்று பக்கிங்காம் கர்னாடிக் நெசவாலை முதலாளிகள் முடிவு செய்துள்ளனர். ஆனால் முதல் அரை வருடத்துக்கு 15 சதவிகிதம் போனஸ் தொழிலாளருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

போனஸ் தொகை குறைக்கப்பட்டுவிட்டதால் சென்ற ஞாயிறன்று நடந்த சென்னைத் தொழில் சங்க அங்கத்தினர் கூட்டத்தில், வாங்கக்கூடாதென்று ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. மார்ச் 15-ந் தேதி இந்த போனஸ் தொகை கொடுக்கப்படவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. அங்கத்தினர் கூட்டத்தில் முடிவு செய்ததையொட்டி பக்கிங்காம் கர்னாடிக் நெசவாலையில் வேலை செய்யும் தொழிலாளரில் 94 சதவிகிதத்துக்கு மேற்கொண்ட தொழிலாளர்கள் போனஸ் தொகையைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். வாங்கிக்கொண்ட சிலருமன்றாக்களும் நிர்வாக அதிகாரிகளும்தான். இப் பிரச்னையில் அரசாங்கம் தலையிட்டு ஒழுங்கு செய்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளத் தொழிற் சங்கம் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்" என்று சென்னைத் தொழிற் சங்கப் பொதுக் காரியதரிசி அறிவிக்கிறார்.

தனிப்பட்ட முதலாளிகள் வசமுள்ள பெரிய நெசவாலைகளில் பக்கிங்காம் கர்னாடிக் நெசவாலையும் ஒன்றாகும். இவ்வாலையில் உற்பத்தி செய்யப்படும் துணிக்கு எப்பொழுதும் கிராக்கி இருந்துகொண்டே வருகிறது. அதுவுமன்றி வெளிநாடுகளிலிருந்து இந்தியத் துணி வேண்டுமென்றே கோரிக்கை வந்திருப்பதுடன் பக்கிங்காம் கர்னாடிக் ஆலைத்துணியை மிகவும் விரும்பி வாங்கிக்கொள்ளப் பல நாடுகள் காத்து நிற்கின்றன.

குறைந்த அளவு சம்பளமே பெறும் இவ்வாலைத் தொழிலாளிகள், இதற்குமுன் இரவு வேலை செய்து தங்கள் குடும்ப வரவு செலவைச் சரிக்கட்டி வந்தார்கள். இந்த இரவு வேலையும் ரத்து செய்துவிட்ட காரணத்தால், மிகவும் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே போனஸ் தொகையை எதிர்நோக்கி ஏற்கெனவே பல காரியங்களுக்கு ஏற்பாடு செய்துவிட்டிருக்கும் காரணத்தால், திடீரென்று போனஸ் தொகையைக் குறைத்துவிட்டால் அதிகத் தொல்லைக்காளாவார்களென்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த நிலையில் ஆலை முதலாளிகள் வருமானத்தின் பெரும்பகுதியைத் தங்களுக்கென்றே வைத்துக்கொள்வது புரட்சித்தீயை மூட்டுவதாகும். முன்னெச்சரிக்கையாக முதலாளிகள் சென்ற ஆண்டு கொடுத்ததைப்போலவே போனஸ் கொடுத்துவிடுவது சிறந்தமுறையாகும்.

சென்னையில் சிற்பக் கண்காட்சி

சென்னை, மார்ச். 16—

சென்னை முன்னேற்ற ஓவியச் சங்கம் சமீபத்தில் ஒரு சிற்பக் கண்காட்சி அமைப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளதாக சங்கக் காரியதரிசி தோழர் ஆர். கிருஷ்ணராவ் கூறினார். இந்தக் கண்காட்சி எழும்பூர் சித்திர, கைவேலை காட்சி இந்தியாவிலேயே முதலில் அமைக்கப்படுவதாகவும், இதற்கு வெளிநாட்டு சித்திர நிபுணர்கள் தங்கள் சிற்பங்களை இதில் வைப்பதற்கு இசைந்துள்ளதாகவும்.

இந்தியத் துணிகள் பிரிட்டிஷார் மனதைக் கவர்ந்துவிட்டது

லண்டன், மார்ச். 16—

லண்டனில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தியத்துணி கண்காட்சிக்கு பிரிட்டிஷ் டிசைனர்களும் பத்திரிகை நிருபர்களும் பார்வையிட்டனர். அங்கு வைக்கப்பட்டுள்ள இந்திய துணி ரகங்கள் அவர்கள் மனதைக் கவர்ந்து விட்டதென்பது அவர்களுடைய பாராட்டுதல்களிலிருந்து தெரியவருகிறது.

பெண்கள் விரும்பக் கூடியதும், திரைகள், சோபாக்கள் முதலியவைகளை அலங்கரிக்கத் தக்கதுமான துணி ரகங்கள் பெரிதும் பாராட்டப்பட்டன.

ஜெருசலத்தில் பழம்பொருள் அகப்பட்டன

ஜெருசலம், மார்ச். 16—

'குருஸேட்' நடந்த காலத்தில் வழக்கத்திலிருந்த, ஒரு காதோலை, ஒரு மண் அகல், 105 செம்பு நாணயங்கள் கொண்ட ஒரு ஜாடி முதலியவைகள் புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் ஜெருசலத்தில் கண்டெடுத்திருக்கிறார்கள்.

இனி நடப்பவை

திண்டுக்கல்—நகர தி. மு. கழகக் கிளையின் உறுப்பினர்கள் பொதுக்கூட்டமொன்று 19-3-50 ஞாயிறு காலை 10-மணிக்கு நடைபெறும். அதுபோது புத்தாண்டு நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும். உறுப்பினர்களெவரும் அழைக்கப்படுகிறார்கள். இடம்: நாடார் தோட்டத்துக்கெதிரிலுள்ள இல்லம்.

* * *

திண்டுக்கல்—இந் நகர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், 19—3—50 ஞாயிறு காலை 10-மணிக்கு ரெட்டியார் சந்து 2-வது இல்லத்தில் தோழர் கோ. இலட்சுமணன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

* * *

எட்டயபுரம்—சாத்தாபுரம் தி. மு. கழகக் கிளையின் சார்பில் கழகக் கட்டிடத்தில் கோவில்பட்டித் தோழர் ஈ. வெ. அ. வள்ளிமுத்து அவர்கள் 19—3—50 ஞாயிறன்று கொடி ஏற்றுவார்கள். பலர் பேசுவர்.

* * *

மதுரை — வடக்கு மாட வீதி மறுமலர்ச்சிக் கழகப் புத்தாண்டு செயற்குழுத் தேர்தல், 19—3—50 ஞாயிறு மாலை 5-மணிக்கு செயலாளர் பிச்சை அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.

* * *

ஒரத்தநாடு—இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழா, 18—3—50 சனி மாலை 5-மணிக்கு "அழகிரி பந்தலில்" நடைபெறும். தோழர் கே. வி. திராவிடமணி தலைமையில் தோழர்கள் என். வி. நடராசன், டி. கே. சீனிவாசன், தோழியர் ஏ. சாவித்திரி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சொளத்தூர்—இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் 19-3-50 ஞாயிறு மாலை 5-மணிக்கு கருணாநிதி சதுக்கத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் ப. கண்ணன் தலைமைவகிப்பார். தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

கோவை மாவட்ட தி. மு. கழக மாநாட்டு வரவேற்புகுழுக் கூட்டம்

வரும் 19—3—50 ஞாயிற்றுக் கிழமை காலை 10-மணியளவில் டி மாநாட்டின் வரவேற்புக்குழுக் கூட்டம் சணிபூரில் நடைபெறும். மாநாட்டின் வரவு, செலவுக் கணக்குகள் பார்த்து முடிவு செய்ய வேண்டியிருப்பதால், வரவேற்புக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் வருமாறு வேண்டப்படுகிறார்கள்.

கே. ஏ. முருகேசன்
செயலாளர்

சேரிவாழ்வோர் மாநாடு

சென்னை, மார்ச். 16—

பீபிள்ஸ் பார்க்குக்கு அருகிலுள்ள மைதானத்தில் 19-3-50 ஞாயிறு மாலை 4-மணிக்கு சேரிவாழ்வோர் மாநாடு நடத்தப்படும். அப்பொழுது சேரிகள் சீர்திருத்தம் பற்றிப் பிரபல தலைவர்கள் பேசுவார்கள்.

இது குறித்து மேலும் அறிந்துகொள்ள விரும்புவோர் தோழர் பக்கிரிசாமி, மாநாட்டு அமைப்பாளர், 136 ஸ்ட்ராலின்ரோட், செம்பூர் சாரக்ஸ், சென்னை என்னும் விலாசத்துக்கு எழுதவும்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

18-3-50

ஒரத்தநாடு:— என். வி. நடராசன், டி. கே. சீனிவாசன், கே. வி. திராவிடமணி, ஏ. சாவித்திரி

19-3-50

கொளத்தூர் (மேட்டூர்):—இரா. நெடுஞ்செழியன், ப. கண்ணன்

பொள்ளாச்சி:— ஈ. வெ. கி. சம்பத், என். இ. பாலகுரு, ஏ. வி. எம். சாமி, கோ. கோபால்

மாநாடு கூட மலான் சர்க்கார் இணங்கியதே மாபெரும் வெற்றி!

—(0)—

மணிலால் காந்தி கருத்து

டர்பன், மார்ச். 15—

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை தங்கள் சொந்த விஷயமென்றும், அது விஷயமாக பேசக் கூட முடியாதென்றும் சொல்லி வந்த மலான் சர்க்கார், இப்பிரச்னை விஷயமாக மாநாட்டில் கலந்துகொள்ள முன்வந்ததே ஒரு மாபெரும் வெற்றியாகும் என்று, டர்பனுக்கு இந்தியாவிலிருந்து திரும்பியுள்ள 'இந்தியன் ஒபினியன்' ஆசிரியர் மணிலால் காந்தி கூறினர்.

இந்த வட்ட மேசை மாநாட்டினால் பலன் ஏற்படாமல் போகாது என்றுதான் நம்புவதாகவும் அவர் கூறினார்.

தென்னாப்பிரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து சொற்பொழிவுகள் புரிந்து வருபவரும், மகாத்மாகாந்தியின் சிஷ்யையுமான தோழியர் முரியல்லெஸ்டர், தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை தீர்க்க முடியாததல்லவென்று கூறுகிறார்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே இருந்துவந்த தீண்டாமையை இந்தியா மூன்று ஆண்டு காலத்தில் ஒழித்திருக்கும்போது, உலகில் தீர்க்க முடியாத பிரச்னை என்று எதுவும் இருக்கவே முடியாது என்று அவர் கூறுகிறார்.

தஞ்சை மாவட்ட தி. மா. மு. கழகம்

இரண்டாவதுசெயற்குழுக்கூட்டம்

தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் 2-வது செயற்குழுக் கூட்டம் 9-4-50 ஞாயிறு பிற்பகல் 2-மணிக்கு திருவாரூர் கருணாநிதி அச்சகத்தின்மேல் அறையில் நடைபெறும். அதுபோது பல முக்கிய வேலைத்திட்டங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்படும். இம்மாவட்டத்திலுள்ள மாணவர்களின் கழகங்களிலிருந்து பிரதிநிதிகள் யாவரும் தவறாது வருகைதருமாறு கேட்டுக்கொள்கிறேன். கிளைக்கழகங்களிலிருந்து வரும் தோழர்களுக்கு வேண்டிய வசதிகள் ஏற்பாடு செய்யப்படும். தீர்மானங்கள் கொண்டுவர விரும்பும் உறுப்பினர்கள் ஏப்ரல் 5-ம் நாட்களுக்குள் எனக்கு அனுப்பவேண்டுகிறேன். இரவு 9-மணிக்கு "அண்ணா அறிவுக் குழுவினரால்" "வேலைக்காரன்" நாடகம் நடித்துக்காட்டப்படும்.

இரா. தென்னன்
விளம்பர உறுப்பினர்
த. மா. தி. மா. மு. கழகம்.
குமரி நிலையம் திருவாரூர்.

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம்

கொழும்பு, மார்ச் 10—

இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மத்திய செயற்குழு கூட்டம், 4 3 50ல் ட்ரக் ரோடியுள்ள தற்காலிகப் பணிமனையில் கூடியது. தோழர் சு. கா. சுந்தரராசன் தலைமைவகித்தார்.

கூட்டத்திற்கு வரமுடியாதவர்கள் தங்கள் கடிதம் மூலம் தங்கள் ஒப்புதலைத் தெரிவித்திருந்தனர்.

சென்ற ஆண்டின் வரவு - செலவுக் கணக்கு செயலாளரால் படிக்கப்பட்டு அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

பின்னர் தோழர் மா. இளஞ்சேரன், வி. சவரிமுத்து ஆகிய இருவரின் பேரில் பல புகார்கள் ஏற்பட்டதின் விளைவாக, அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. டி தோழர்கள் அனுப்பியிருந்த இராஜினாமா கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு இலங்கைத் தி. மு. கழகத்தில் இருந்த எல்லாவிதப் பொறுப்புகளையும், பதவிகளையும் ரத்து செய்யப்பட்டது.

இதனால் ஏற்பட்ட காலி இடங்களுக்கு, செயலாளராகத் தோழர் எஸ். கே. மாடசாமி கிருஷ்ணனும், பொருளாளராகத் தோழர் க. கந்தசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(செ-ர்)

கட்டாய ஆரம்பக்கல்வி அமுல்

தொல்லை ஏற்படுகிறதென்கிறார் மாதவமேனன்

சென்னை, மார்ச். 15—

கட்டாய ஆரம்பக் கல்வி சம்பந்தமாக ஒரு கேள்விக்குக் கல்வி மந்திரி மாதவமேனன் சட்டசபையில் பதிலளிக்கையில், பள்ளிக்குச் செல்ல வேண்டிய வயதுள்ள குழந்தைகள் மாகாணத்தில் 70 லட்சம் இருக்கின்றனவென்றும் இதில் 1947-48-ல் 36,50 748 பேர்தான் உண்மையில் கல்வி பயின்றுவந்தனரென்றும் அறிவித்தார்.

தோழர் காசப்பா கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் 5-லிருந்து 14 வயதுவரையுள்ள குழந்தைகள் இலவசக் கட்டாயக் கல்வி பெறும்படி செய்ய வேண்டுமென்று அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளதென்று அறிவித்தார். ஆனால் அரசியலமைப்பு அமுலுக்கு வந்த ஜனவரி 26-ந் தேதிக்கு முன்பே கட்டாய ஆரம்பக் கல்வியில் சர்க்காரும் அதிக அக்கறை காட்டி வந்ததென்று மந்திரி மாதவமேனன் கூறினார்.

ஆரம்பக் கல்விச் சட்டத்தின்படி குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டுமென்ற ஏன் வற்புறுத்தக்கூடாதென்று தோழர் மஜீத் கேட்டதிற்கு, இதனால் நன்மையைவிடத் தொல்லையே அதிகரிக்கிறதென்று கூறினார்.

கழக நடவடிக்கைகள்

சென்னை:— புதுப்பேட்டை தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 5-3-50 சனி மாலை கழகக் கட்டிடத்தில் நடைபெற்றது. கீழ்க் காணும் இரு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேறின.

1 கழகத்தின் பிப்ரவரி மாத வரவு செலவுக் கணக்குசெயற்குழுவினரால் பரிசிலனை செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

2 28-3-50 அன்றைய பொதுக் கூட்டத்திற்கு வேண்டிய பேச்சாளர்களை அழைக்க, தலைமை நிலைய பிரச்சாரக்குழுச் செயலாளர் இரா. செழியன் அவர்களைக் கண்டு பேசி முடிவுசெய்ய, கழகச் செயலாளர் பொ. மதிவாணன், பொருளாளர் ம. வீரராகவன் ஆகியோரை அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டது.

* * *

[illegible]ராசை:—7-3-50 மாலை 6 மணிக்கு தி. மு. கழகச் செயலாளர் கோ. இராதாமணாளன் முன்னிலையில் நடைபெற்றபொழுது அதுபோது, கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1 சேலம் சிறைக்காவலில் வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளின் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்து 22 பேர் மாணமடைந்ததைக் கண்டு வருந்துவதுடன், இச்செய்கையை வன்மையாகக் கண்டிப்பதுடன், சர்க்கார், அதிகாரிகளின் மேல் சேர்மையாகத் தீர்ப்பு தரும்படி தக்க நடவடிக்கைஎடுக்குமாறு இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

2 ஏப்ரல் மாத முதல் வாரத்தில் ஓர் பொதுக்கூட்டம் தோழர்களான சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன், பொன்மலை ஜி. பராங்குசம் இவர்களைக்கொண்டு நடத்துவதென தீர்மானிக்கிறது.

3 இச்செயற்குழு தஞ்சை மாவட்ட அமைப்பாளரானதோழர் கே. கே. நீலமேகம் அவர்களை உடனடியாக மாவட்டக் கழகத்தை ஏற்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறது.

* * *

ராசமாபக்கன்பட்டி:— 6-3-50 கூடிய இவ்வூர் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானம்:—

1. சேலம் மத்திய சிறையில் அடைப்பட்டிருந்த பாதுகாப்புக் கைதிகள் சிறை அதிகாரிகளால் சுடப்பட்டு 22 பேர் கொல்லப்பட்டும் 100 மேற்பட்டவர்கள் குண்டடிப்பட்டுத் துன்புறும்படியான கொடுமை மிக்க செய்கையானது அன்பு, அஹிம்சைகொண்டு ஆளப்போவதாகக்கூறி ஆட்சி பீடமேறியோரின் அரசாங்கத்தில் நிம்மதி தம்பாக்கி தலைத்தனம் நடத்தப்பட்டதை இக்கூட்டம் மிக மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

* * *

கன்பா:— 5—3—50 ஞாயிறு அன்று கன்பா தி. மு. கழகக் கட்டிடத்தில் திருவள்ளுவர் சொற்பயிற்சி நடைபெற்றது. தோழர் குருநாதன் தலைமை வகித்தார்.

தோழர் சாரதி சென்ற பயிற்சியின் விளக்கத்தை வாசித்தார்.

தோழர் வேலை வில்லவன் தமிழர் பழமையும் புதுமையும் என்பதைப்பற்றிப் பேசினர்.

தோழர் இளஞ்செழியன் நீண்டாமை என்பதைப்பற்றிப்பேசினர்.

தோழர் பாண்டியன் நீண்டாமையும் வைதிகமும் என்பதைப் பற்றிப் பேசினர்.

தோழர் கண்ணன் இந்து மகா சபையினர் போக்கைக் கண்டித்துப் பேசினர்.

தோழர் அண்ணாமலை தனது பூர்விக பக்தியையும் தற்கால நிலத்தையும் விளக்கிப் பேசினர்.

தோழர் குப்புசாமி மக்கள் நிலைமையும் பெண்கள் முன்னேற்றத்தையும் குறித்துப்பேசினர். கடைசியாக செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

ஆனைமலை:—சேலம் மத்திய சிறையில் இருந்த பாதுகாப்புக் கைதிகள் சிறை அதிகாரிகளால் சுடப்பட்டு, 22 பேர்கள் கொல்லப்பட்டும், 100 க்கு மேற்பட்டவர்கள் குண்டடிப்பட்டுத் துன்புறும்படியான கொடுமை மிக்க செய்கையானது, அன்பு, அஹிம்சைகொண்டு ஆளப்போவதாகக்கூறி, ஆட்சிப்பீடமேறியோரின் அரசாங்கத்தில் இம்மாதிரித் துப்பாக்கித் தலைத்தனம் நடத்தப்பட்டதை ஆனைமலைத் திராவிட முன்னேற்றக் கழகக் கமிட்டிக் கூட்டம் மிக மிக வன்மையாகக் கண்டிக்கிறது. கூட்டம் 9-3-50ல் நடைபெற்றது.

* * *

விருதுநகர்:—இராமநாதபுரம் மாவட்ட செயற்குழுக் கூட்டம் 5—3—50-ல் அருப்புக்கோட்டை தியாகராயர் வாசகசாலையில் தோழர் எம். எஸ். இராமசாமி தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது:—

1. வைத்திய வள்ளல் ச. வெ. கிருஷ்ணசாமி அவர்களின் மறைவு குறித்து இக்கூட்டம் இரங்குகிறது.

2. பொதுச் செயலாளர் அவர்களை மாவட்ட சுற்றுப்பிரயாணம்செய்ய சம்மதம் கேட்டு அவர் வழிக்கேற்ப நாள் குறிக்கவும், இதர விஷயங்களைத் தீர்மானிக்கவும் பொதுக்குழுவைக்கூட்டவும் செயலாளர்க்கு அதிகாரம் அளித்தது.

3. மாவட்ட மாநாடு நடத்துவதுபற்றி அடுத்து கூட்ட இருக்கும் பொது குழுவில் ஆலோசிப்பது எனத் தீர்மானித்தது.

4. சேலம் சிறையில் இருந்த அரசியல் கைதிகளில் 22 பேர் உடனே மாணமடையவும் 108 பேர் படுகாயம் அடையவும் ஏழெட்டு பேர் மரணப்படுக்கையில் கிடக்கும்படியும் அகாரணமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ள சென்னை சர்க்காரின் காட்டுமிராண்டிப் போக்கை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

* * *

பெங்களூர்:— உக்கடாமைன நகர உட்கிளை தி. மு. க. வின் கூட்டம் வழக்கம்போல் 5-3-50 ஞாயிறு காலை, 10-மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெற்றது. தோழர் த. வி. தங்கராசன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

பிரசார செயற்குழு அங்கத்தினர்களாக மா. ச. ராசன், மு. உ. முனுசாமி, அ. அ. வீரராகவன், மு. பிரகலாதன், ச. வரதராசன், வே. கி. சாமி, மு. பொ. பசுபதி, ரா. கி. கண்ணன், மா. டி. இராமன், மொ. சமராசன், கு. கோபால், முதலிய பதினொரு பேர்களின் அபிப்பிராயத்திற்கிணங்க, முன்பிருந்த செயற்குழு நல்ல முறையில் பணியாற்றுவதால், செயலாளர், த. வி. தங்கராசன், து. செயலாளர் ஏ. அந்தராசன், பொருள் உதவியினர், மா. வா. மனுவேல், வி. உதவியினர், க. இராமன். முதலியவர்கள் புதிதாய் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர் என். வி. நடராசன் அவர்கள் கன்னட மாவட்ட தி. மு. க. அமைப்பதற்கு தங்களால் வந்த சமயம் மேற்படி கிளையின் பிரதிநிதிகளிடம், தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் பெங்களூருக்கு மார்ச் இறுதி வாரத்தில் வருவார் என தெரிவித்தார். அதன் மேரில் தோழர் அண்ணாதுரை யைக்கொண்டு திறப்பு விழாவும் ஒரு பொதுக் கூட்டமும் நடத்த முடிவு செய்யப்பட்டுவிட்டது.

மற்றும் பிரதிவாரந்தோறும் கழகத்தில் சொற்பொழிவு பயிற்சி நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

அநேக இன்னும் பல திட்டங்கள் நிறைவேறின. பிறகு தலைவர் முடிவுரைக்கேற்ப தோழர் ஏ. ராசன் நன்றி கூற கூட்டம் பிற்பகல் 1.30 மணிக்கு முடிவுற்றது.

வலையில் சிக்கிய கிரேக்க தங்க நாணயங்கள்

ரோம், மார்ச். 15—

விஸிலிப்பச் சேர்ந்த சில செம்படவர்கள் மீன் பிடிக்க வீசிய வலையில், ஒரு குடம் நிறைய தங்க நாணயங்கள் சிக்கின. இந்த நாணயங்கள் கிரீஸ் தேசத்தில் புராதன காலத்தில் வழக்கில் இருந்தவையெனத்தெரிகிறது.

இதைச் செம்படவர்கள் வெளியிடாது மறைத்து வைத்திருந்த போதிலும், ரகசியம் எப்படியோ வெளியாகி அதிகாரிகள் அவைகளைக் கைப்பற்றிவிட்டனர்.

இரவில் வருபவர் 'ஈவினிங் டிரஸ்'ஸில் வரவேண்டும்!

லண்டன், மார்ச். 15—

இரவில் செய்தி அறிவிப்பதற்காக உள்ளவர்கள் 'ட்யூடி'க்கு வரும்போது 'ஈவினிங் டிரஸ்' போட்டுக்கொண்டு வரவேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பிக்க பி. பி. ஸி. உத்தேசித்திருக்கிறது

இது 'அனௌன்ஸர்'களுக்கிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. பத்தாண்டுக்கு முன்பு இவர்கள் 'ஈவினிங் டிரஸ்' போட்டுக்கொண்டுதான் இரவில் வேலைக்கு வருவது வழக்கமாம். இப்பொழுது 'ஈவினிங் டிரஸ்' புதிதாக வாங்க ரூ. 520 செலவாகிறதாம்.

சிறுத்தை தப்பியது

நியூயார்க், மார்ச் 15—

ஆர்லண்டு உயிர் காட்சி சாலையிலிருந்து தப்பிவிட்ட சிறுத்தையைப் போலீஸார் தேடிவருகிறார்கள். சிறுத்தை எங்கே வீட்டிற்குள் நுழைந்துவிடப் போகிறதோ என்று மக்கள் கதவை அடைத்தும் பீதியுடனிருக்கின்றனர். —ஞுரோப்

கடல் பாசியை உணவாக மாற்ற ஆலை

லண்டன், மார்ச் 15—

கடல்பாசியைக்கால் நடைகளுக்கு உணவாக மாற்றும் ஒரு ஆலை ஸ்காட்லாந்தில் ரூ. 520,000 செலவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இங்குள்ள கடற்கரைப் பிரதேசங்களில் கடல் பாசிகள் ஏராளமாகக் கிடைக்கிறதாம்.

இப்பொழுது கடல் பாசியிலிருந்து தயாரிக்கப்படும் கால்நடை உணவு மெக்ஸிகோ, அயர், ஸ்காண்டிநேவியா முதலிய நாடுகளிலிருந்து ஒரு டன் ரூ. 1,300-க்கு வரவழைக்கப்படுகிறது. ஸ்காட்லாந்தில் உற்பத்தியாகும் இவ்வுணவு ஒரு டன் ரூ. 325-க்குக் கிடைக்குமாம். —ஞுரோப்

போனஸ் அயர்ஸ், மார்ச். 15—

ஆர்ஜென்டினா விமான மந்திரி இலாகாவுக்கு 8 பிரிட்டிஷ் விமானிகளை ஆலோசகர்களாக நியமிக்க செய்துகொள்ளப்பட்ட ஒரு உடன்படிக்கை பிரஸிடெண்ட் பெரான் அங்கீகரித்துவிட்டார்.

உதவி செய்தவர் கைது!

போடிநாயக்கனூர், மார்ச் 7—

போடிநாயக்கனூர் சந்தர்தேவன் என்றகப் பூனிங்தேரோழ் தலைமறைவாக இருந்த காலத்தில், அவருக்கு உதவி புரிந்து வந்ததாக போடி மச்சக்காளைத் தேவன், குன்னிவிருபாண்டித் தேவன், மூக்கத்தேவன் வகையறா 5 பேர்களை இ. பி. கோ. 212-வது பிரிவின்படி கைது செய்து பெரியகுளம் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வசையார் ரிமாண்டில் வைத்திருக்கிறார். (ஈ-கி)

நடுநிலைமைக்கு ஊறுசெய்யும் ஒப்பந்தம் வேண்டாம்!

—————(0)—————

தெ. கி. ஆசிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட நேரு மறுப்பு ?

லண்டன், மார்ச். 15—

தென் கிழக்கு ஆசியா பாதுகாப்பு ஒப்பந்தத்தில் சேர நேரு மறுத்துவிட்டதை வாஷிங்டனிலுள்ள யு. எஸ். ராஜாங்க அதிகாரிகளிடம் யு. எஸ். சர்வதேச தூதுவர் ஜெஸ்ஸப் அறிவிப்பார் என்று இங்கு கிடைத்துள்ள செய்தி கூறுகிறது.

பண்டித நேரு எந்த நாட்டிற்கும் எதிராக அமைக்கப்படும் முன்னணியில் இந்தியா சேராது என்பதை, ஜெஸ்ஸப்பிடம் தெளிவாகத்தெரிவித்துவிட்டாராம்

இந்தியா ஒத்துழைப்பு தல்மை இவை இல்லாதஎந்த தென்கிழக்கு ஆசியாவுக்கான ஏற்பாட்டையும் யுனைடெட் ஸ்டேட்ஸ் காங்கிரஸ் ஆதரிக்காது என்றும் அச்செய்தி கூறுகிறது.

தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிஸம் பரவாமல் செய்ய அங்குள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்கிற காமன்வெல்த் முடிவையே ஜெஸ்ஸப்பும் தன் ரிப்போர்ட்டில் வற்புறுத்தலாம் எனத் தெரிகிறது.

ஆனால் ஆக்ரமிப்பு என்று ஏற்பட்டால், அதைத் தடுக்க ராணுவ நடவடிக்கை எடுப்பது அவசியம் என்பதையும் அவர் வற்புறுத்தலாம் என்று கூறப்படுகிறது.

குறை நீக்காவிட்டால் தீவிர நடவடிக்கை

நகரசபைக்கு கஸ்தூரிபா சங்கம் கண்டனம்

கிண்டி, மார்ச் 11—

கிண்டி கஸ்தூரிபா சங்கத்தின் சார்பில் சென்ற சனிக்கிழமையன்று மாலை 6-30 மணிக்கு மேற்கிண்டியில் தோழர் எஸ். கோவிந்தராஜன் அவர்களின் தலைமையில் கூடிய பொதுக் கூட்டத்தில், மேற்படி கிண்டி வட்டாரம் நகர சபை எல்லைக்குள் சேர்க்கப்பட்டு, 4 வருடங்களாகியும் சாக்கடை சேரிவரும் சொற்ப குறைகள்கூட நகர சபையாரால் கவனிக்கப்படாதிருக்கிறது. இந்த நிலைமை நீடிக்குமானால், தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வரி கொடா இயக்கமும் ஆரம்பிப்போம் என சங்கச் செயலாளர் தோழர் ரா. புருஷோத்தமன் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது, கிண்டி வட்டாரத்தில் வசிக்கும் ஹரிஜனங்களுக்கென 2 தண்ணீர் தேக்கு தொட்டிகள் கட்டி கொடுக்கும்படியும், விநாயகர் கோவில் தெருவிலுள்ள தற்போதைய பொதுக் கக்கூஸ்களை மராமத்து செய்யப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தி கமிஷனரைக் கேட்டுக்கொண்டார்.

தோழர் க. சண்முகனார் அவர்கள் "நகர சபையும், நாமும்" என்பதுபற்றி தெளிவாக சொற்பொழிவாற்றினார்.

இறுதியில் கிண்டி வட்டாரத்திற்கு வேண்டியதேவைகளடங்கிய பட்டியல் ஒன்று தீர்மானங்களின் உருவத்தில் தயாரிக்கப்பட்டு நகர சபைக்கு அனுப்பப்பட்டது.

கோலாலம்பூர், மார்ச். 15—

மலேயாவில் கலகக்காரர்கள் மீது குண்டு வீசித் தாக்குவதற்காக ஹாங்காங்கிலிருந்து விமானங்கள் தருவிக்கப்பட்டிருக்கின்றன.

எக்ஸ்பிரஸ் மீது துப்பாக்கிப் பிரயோகம்

வியன்னா, மார்ச். 15—

வியன்னாவின் தென் ரயில்வே ஸ்டேஷனைவிட்டு புறப்பட்டு மெதுவாகச் சென்று கொண்டிருந்த வியன்னா—ரோம் எக்ஸ்பிரஸ் ரயில் வண்டிமீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது

ரோமுவுக்கு சர்க்கார் காரியமாக செல்வதற்கு அவ்வண்டியில் ஏறியிருந்த ஆஸ்திரியா அமெரிக்கா அதிகாரியிருவரிலொருவர் தப்பினார் மறிவைந்து நாட்களுக்கு முன்புதான் ஆர்லெஸ் எக்ஸ்பிரஸில் பிரயாணம் செய்த அமெரிக்க அதிகாரி சுட்டுக்கொல்லப்பட்டதாகவிருக்கும். —ஞுரோப்

ரயில் பாதை காவலாளிகள் தாக்கப்பட்டனர்

ரசிரி, மார்ச். 15—

நகிரிக்கும் வேபகுண்டாவுக்குமிடையில் ரயில் பாதையைக்காத்து நின்ற காவலாளிகள் மீது மார்ச் 10-ந் தேதி இரவு யாரோ கத்தியை வீசிடெறிந்தார்கள். சம்பவம் குறித்துசெங்கிரிகிரி, ரேணிகுண்டா ஸ்டேஷன்மாஸ்டர்களுக்கு உடனே அறிவிக்கப்பட்டது.

நகரி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் செய்தி கேட்டுப் போலீஸ் படையுடன் சென்று புலன் விசாரித்தார். யார் செய்தவரென்று கண்டுபிடிக்க முடியவில்லை. இப்பாதையில் செல்லும் வண்டிகள் இரண்டு மணி நேரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்து பாதை பரிசிலனை செய்யப்பட்டபின் விடப்பட்டது. சென்னையைவிட்டுப் புறப்பட்ட பம்பாய் மெயில் அரக்கோணத்தில் 2 மணிநேரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. மேற்கொண்டு புலன் விசாரிப்பு நடந்து வருகிறது.

புகை பிடித்தால் அபராதம்!

பாரிஸ், மார்ச் 15—

அமெரிக்காவில் பிறந்த பிலிம் 'எக்ஸ்டிரா' நடிகை பாமீலாடிகானிக் தன் ஹோட்டல் அறையில் 'மரிஹுவானு' சிகரெட்டைப் பிடித்ததற்காக ரூ. 180 அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார்.

மரிஹுவானு என்பது தென் அமெரிக்க லாகிரி வஸ்துவாகும்.

கோல்ட் கோஸ்டில் அலுமினியம் உற்பத்தி

கோல்ட் கோஸ்டில் வோல்டா நதியின் மீது கட்டப்படும் அணையின் விளைவாக, அலுமினிய உற்பத்தி ஏராளமாக அதிகரிக்கும் எனத் தெரிகிறது. இப்பகுதியில் பாக்ஸைட் அலுமினியம் ஏராளமாக அகப்படுவதன் விளைவாகப்புது அலுமினியத்தொழிற்சாலைகள் ஏற்படவிருக்கின்றன.

கோல்ட் கோஸ்ட் அலுமினியம் உலகிலேயே சிறந்ததாம். இங்குள்ள சாக்கங்களை 'வெஸ்ட் ஆப்ரிக்க அலுமினிய கம்பெனி' எடுத்து வேலை செய்யும் எனத் தெரிகிறது.

"அறப்போர்"

நாகர்கோவில், மார்ச் 13—

நாஞ்சில் மாவட்டத்திலிருந்தும் தோழர் வி. கணபதி அவர்களை ஆசிரியராகக் கொண்டு "அறப்போர்" என்னும் மாத மிருமுறை தெழ் விரைவில் வெளிவர விருக்கிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1